# அலுவலகத்தில் பயிலுனர்களாக / தொண்டாகளாக வருபவர்களிற்கான நடைமுறைகள்

01. அலுவலகத்திலும், களத்திலும் தொண்டர்கள்/பயிலுனர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவர்

02. வேலையின் தன்மைக்கும் பணியாற்ற வருபவர்களின் வதிவிடத்தையும் கருத்தில் கொண்டே அவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

03. பயிலுனர், தொண்டர்கள் அவர்கள் விரும்பும் காலம் வரை சேவையாற்றலாம்

04. அவர்கள் சேவையாற்றும் காலத்தில் அமைப்பினால் எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்பட மாட்டாது.

05. சேவையின் தரம், செயற்பாடுகளின் தன்மை, என்பவற்றை கருத்தில் கொண்டு அவரின் சேவை அமைப்பின் வளர்ச்சிக்கு தேவையானதென கருதும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டளவான உதவு தொகை வழங்கப்படும்.

06. அமைப்பில் நடைபெறும் பயிற்சிகளிலும், பிரத்யேக வகுப்புக்களிலும் (ஆங்கிலம், கணினி) கலந்துகொள்ளலாம்.

07. பயிலுனர் / தொண்டர்களிற்கு அமைப்பில் பணி நிரந்தரமாவதற்கான எவ்வித உத்தரவாதமும் வழங்கப்பட மாட்டாது.

08. பயிலும் காலத்தில் அமைப்பில் பணிக்கப்படும் எந்த வேலைகளையும் செய்வதற்கு தயாரானவர்களாக இருக்க வேண்டும்.

09. விடுமுறை, அலுவலக நேர ஒழுங்கு என்பவற்றில் கட்டுப்பாடுகள் இல்லை, எனினும் இவற்றில் ஒழுங்கினை கடைப்பிடிப்பவர்களின் சேவை அமைப்பில் ஏற்படும் பதவி வெற்றிடங்களின் போது விசேடமாக கவனத்தில் கொள்ளப்படும்.

10. அமைப்பில் ஏற்படும் பதவி வெற்றிடங்களின் போது விண்ணப்பங்கள் கோரப்படுமாயின் அதற்கு இவர்கள் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் நேர்முகப்பரீட்சையில் விசேட சலுகைப் புள்ளிகள் வழங்கப்படும்.

11. அமைப்பின் சொத்துக்கள் பாவனையில் வரையறை உண்டு. இவற்றைப்பயன்படுத்துவதாயின் உரிய அதிகாரியின் அனுமதியைப் பெற வேண்டும்.

12. விடுமுறைகள் எடுப்பதாயின் முன்கூட்டியே இணைப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.